1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சரியாக எழுதி கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கேரள மாநில ஆலடியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

261—(* வினா எண் 13397)—திரு. க. சோலைராசு மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலம், ஆலடியிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) கேரளாவிலிருந்து வேறு திட்டங்கள் மூலம் தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் உண்டா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கேரளா மற்றும் தமிழக மாநிலங்களிடையே ஏற்படுத்தப்பட்ட நதிநீர் உடன்பாட்டில் ஏற்கனவே பெரியார் படுகை இடம் பெற்றுள்ளதால், திரு. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் மத்திய அரசால் நியமிக்கப் பெற்ற தொழில்நுட்பக் குழு 1981ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அளித்த தனது அறிக்கையில் பெரியார் படுகையைச் சேர்த்துக்கொள்ளவில்லை. 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மத்திய பாசனத் துறையால் ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழுவின் ஆய்வு எல்லைக்கு, கேரளாவிலுள்ள வாமனாபுரம், அச்சன்கோயிலாறு மற்றும் கல்லடா படுகைகள் மட்டுமே உட்படுத்தப்பட்டது. எனவே, பெரியாறு படுகையிலுள்ள உபரி நீரை கேரளாவிலுள்ள ஆலடியிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவரும் இவ்வரசின் செயற்குறிப்பினை இக்குழுவினால் பரிசீலிக்க இயலாது என மத்திய நீர்வளக் குழு தற்பொழுது தெரிவித்துள்ளது.

(ஆ) ஆம்.

(முற்பகல் 11-00)

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் மட்டும் அரசினுடைய பரிசீலனையிலே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 2-12-1982 அன்று நம்முடைய தமிழக அரசினுடைய ஆணையர் மற்றும் செயலர் மாதவ சர்மா அவர்கள் கேரள அரசு தனிச் செயலர் அவர்களோடு இரு முனைப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும், இத்திட்டத்தை பரிசீலனையில் எடுத்துக்

கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும் தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு சென்ட்ரல் வாட்டர் கமிஷன் இதற்கு எழுதுகிற பதிலிலே, இத்திட்டத்தை விரைவாக பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குரிய சில தாக்கீதுகள் வரவில்லை என்று சொன்னபோது, தமிழக அரசினுடைய துணைச் செயலாளர் திரு. மான்சிங் அவர்கள் எழுதியிருக்கிற பதிலில் இத்திட்டத்தைக் குறித்து சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். இதிலுள்ள விவரங்களில் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா அல்லது ஏதாவது இத்திட்டம் வருவதற்குரியசாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தமட்டிலும், இத்திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்: என்று கருதுகிறது. அதன்மூலமாக நமக்கு இலாபம் இருக்கும் என்ற எண்ணத்தோடு, இத்திட்டத்தை வற்புறுத்திக்கொண்டும் தொடர்ந்து அதற்கு வேண்டிய, முயற்சிகளை எல்லாம் செய்து கொண்டும் இருக்கிறோம். ஆனால் கேரளாவிலே நீர்த்தேக்கத் திட்டத்திற்கும், பெரியார்நீர்த்தேக்கத் திட்டத்திற்கும் நடுவிலே இந்த ஆலடித் திட்டம் இருக்கிறது; இடுக்கி நீர்த்தேக்கத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் கட்டி மின்உற்பத்தி செய்துகொண்டிருக்கிற காரணத்தால், அங்கே 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் அந்தத் தண்ணீர் வெள்ளமாகப் போகிறது; ஆகவே, குறைவான நீர்த் தேக்கத்தண்ணீர்தான் அங்கே இருக்கிறது; ஆகவே ஆலடித திட்டத்திற்கு நாங்கள் ஒப்புதல் கொடுக்க முடியாது என்று சொல்லி கேரள அரசு மறுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

அரசு மூலம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ள கிராமங்கள்

வினா 559—திரு. த: புஷ்பராஜ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் எத்தனை கிராமங்களுக்கு அரசு மூலம் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

31–5–1986 வரை 5,218 ஊராட்சிகளுக்கு 5,264 சமுதாயத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.